★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 அடி 31 நம்மூரான் 22 இதழ் 185
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-8-79

New Cambridge Tutorrial Institutes
Thirunelvely Junction
5-8-79-ல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
1. Short Hand & Typing
2. பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல்.
3. சங்கீதம், திருமுறை (தேவாரம்) பண்பயிற்சிநெறி
4. G C E. [O/L] [A/L] வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்.
புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.
விபரங்கட்கு :-
V. M. PAKKIANATHAN

## கூட்டணி அலுவலகத்தில் அரைக்கம்பத்தில் கொடி

(யாழ்ப்பாணம்)
கலாநிதி என். எம். பெரேராவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக்காரியாலயத்தில் அரைக்கம்பத்தில் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. [டு]

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS ★ LIBRARY ★ RECEIVED 1979-8-16 PERIODICALS DIVISION

# என்.எம்.மின் இறுதிச் சடங்கும் யாத்திரையும் திங்கள் மாலை!

## நாளை முதல் பார்லிமெண்டில் பொதுமக்கள் அஞ்சலி

### பல தலைவர்களும் இரங்கல்; அரச மரியாதை

(கொழும்பு)

இலங்கையின் முன்னோடி அரசியல் தலைவரும், தலைசிறந்த தொழிற்சங்கவாதியும், சோஷலிஸத் தந்தையும், இந்நாட்டின் சகலஇன மக்களினாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தேசியத் தலைவருமான காலஞ்சென்ற கலாநிதி என்.எம்.பெரேராவின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் திங்கட்கிழமை சுதந்திர சதுக்கத்திலுள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெறும்.

மறைந்த தலைவரின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக நாளை வெள்ளிக்கிழமைமுதல் திங்கட்கிழமைவரை பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும். இதன் பின்னர் பூரண அரச மரியாதைகளுடன் தகனக்கிரியைகளுக்காக சுதந்திர சதுக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

### அரசாங்க உதவி நடவடிக்கை

நேற்று முன்தினமிரவு காலஞ்சென்ற கலாநிதி என். எம். பெரேராவின் மரணச் சடங்குகளுக்கான சகல உதவிகளையும் வழங்க அரசாங்கம் முன்வந்திருக்கும் அதேநேரத்தில்; மரணச் சடங்குகள் சம்பந்தமான ஏற்பாடுகளையும் தயாரிக்கவும் ஒழுங்குகள் செய்துள்ளது.

இதற்கேற்றவகையில் சில முன்னேற்பாடான நடவடிக்கைகளை அரசாங்கம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

சுதந்திர சதுக்கத்திலுள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் மரணச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள அதேநேரத்தில்; மரணச்சடங்கில் அரசு ஊழியர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டுமுறைகளையும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

### அரசு ஊழியருக்கு அரைநாள் லீவு

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் இறுதிச்சடங்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## 'மஸாச்சு செட்ஸ் தீர்மானம் மத்திய அரசின் கருத்தல்ல'

### அமெரிக்க பாராளுமன்றக்குழு தகவல்

(கொழும்பு)

"அமெரிக்க 'மஸாச்சுசெட்' மாலநில சட்டசபை அண்மையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானம் அமெரிக்க மத்திய அரசாங்கத்தின் கருத்தல்ல. வெளிநாட்டுக் கொள்கைகள் மத்திய அரசின் பொறுப்பானதே."

இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கப் பாராளுமன்றக் குழுவினர் நேற்று முன்தினம் கோல்வேஸ் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தனர்.

மஸாச்சுசெட்ஸ் சட்டசபையின் தீர்மானம் பற்றி நிருபர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குழுவினர் தொடர்ந்து இது

[8ம் பக்கம் பார்க்க]

## புலோலி வங்கிக்கொள்ளை:

## உயர்நீதி மன்றத்தில் விரைவில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

புலோலி வங்கிக் கொள்ளை வழக்கு யாழ் உயர்நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. இதற்கான பத்திரங்கள் யாவும் அட்டர்னி ஜெனரல் அலுவலகத்திலிருந்து வந்துசேர்ந்துவிட்டன.

த. மகேந்திரன், நா. சந்திரமோகன், நா. நல்லையா, ந. ஜெயக்கொடி, ஆ. நற்குணநாதன், இ. தவராசா, வே. பாலகுமார், ந. லோகநாதன், சி. நித்தியானந்தன், ரி. சோமோகன், இ. நிமால், யோ. தபொ. ஜெயம் ஆகிய 12பேர்

[8ம் பக்கம் பார்க்க]

## "மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தவர் என்.எம்."

### யாழ். மாவட்ட அமைச்சர் இரங்கற்செய்தி

[யாழ்ப்பாணம்]

"மக்களின்பெருந்தொகையானோரின் அபிமானத்தைப் பெற்றிருந்த டாக்டர் என். எம். பெரேராவின் மறைவு குறித்து நான் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன்",

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. வியகோன், அமரர் என். எம். பெரேரா மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் குறிப்பிட்டதாவது-

"பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலிருந்தே நான் அவரின் அபிமானியாக இருந்து வந்தேன். பொதுமக்களினதும், இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தினதும் மேன்மைக்காக அவர் பெரும் பணியாற்றினார். இலங்கையின் தொழிலாளர் இயக்கங்களின் முன்னோடிகளில் ஒருவர் என்ற வகையில் அவரது பெயர் சரித்திரத்தில் இடம்பெறக் கூடியதாகும்".

### யோகேந்திராவின் இரங்கற் செய்தி

யாழ் மாவட்ட அமைச்சரின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

"டாக்டர் என் எம் பெரேராவின் மறைவுகுறித்து ஆழ்ந்த கவலைகொண்டுள்ளேன்.

[8-ம் பக்கம் பார்க்க]

## 'அரசியல் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்'

[கொழும்பு]

"இலங்கை அரசியல் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியவர் கலாநிதி என். எம். பெரேரா"

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"அரசியல் தலைவர்கள் பலருக்கு ஆசிரியரான கலாநிதி பெரேரா இலங்கை உருவாக்

[8ம் பக்கம் பார்க்க]

திருமதி சாந்தி இராஜேந்திரன்
(கொழும்பு)
அவர்களின் மாணவியும்
திரு. சி. தம்பித்துரையின் பேத்தியுமான
செல்வி
கீதாஞ்சலி குலேந்திரனின்
பரதநாட்டிய அரங்கேற்றம்
காலம்: 19-08-79 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி
இடம்: யாழ்.வீரசிங்க மண்டபம்
தலைவர்: தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மாண்புமிகு மு. சிவசிதம்பரம்
விருந்தினர்: யாழ். மாவட்டநீதிபதி கௌரவ யோ.ஞா.ஆசீர்வாதம்
ஆசியுரை: செல்வி ப. ஆறுமுகம் [அதிபர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி]
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
நா. குலேந்திரனும், பாரியாரும்.
3369

திருநெல்வேலி குடியேற்றத் திட்டம்

# குடியேறாதவர்களின் காணி ரத்துச் செய்யப்படும்!

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி குடியேற்றத்திட்டத்தில் இதுவரை குடியேறாதவர்களின் காணிகள் ரத்துச்செய்யப்படவிருக்கிறது. இதற்கான அனுமதி உயர்மட்டத்தில் இருந்து கிடைத்துள்ளது!

ரத்துச்செய்யப்படும் இக்காணிகள், யாழ்ப்பாணப் பகுதியில் காணியில்லாதவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

திருநெல்வேலி ராஜவீதியிலுள்ள இக் குடியேற்றத் திட்டத்தில் இரண்டு பரப்பு வீதம் 170 பேருக்கு காணி வழங்கப்பட்டது.

இதில் சுமார் 100 பேர் வரை குடியேறியுள்ளனர்.

மிகுதி 70 பேரும் இன்னும் குடியேறவில்லை. இவர்களின் காணிகள் இம்மாத இறுதியில் ரத்துச்செய்யப்படவிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [அ]

# காணி கைமாறல்: விசாரணை நடக்கும்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி குடியேற்றத்திட்டத்தில், அனுமதி பெறாமல் காணிகள் கைமாறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இதுபற்றி விசாரணை நடைபெறவிருக்கிறது.

கைமாறப்பட்ட சுமார் 30 காணிகள் பற்றி விசாரணை நடந்தபின்னர் இக் காணிகள் ரத்துச்செய்யப்பட்டு, காணியற்றவர்களுக்கு வழங்கப்படும் என்று சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கைமாறப்பட்ட காணிகளில் குடியிருப்போர்களில் காணியற்றவர்கள் என்று நிரூபிக்கப்படுபவர்களுக்குமீண்டும் காணி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [அ]

## சட்டவிரோத கருத்தடை டாக்டர்களுக்கு வலைவிரிப்பு

[கொழும்பு]

சட்டவிரோத கருத்தடைச் சிகிச்சைகளை நடாத்தும் டாக்டர்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

சில அரசாங்க வைத்தியசாலை டாக்டர்கள் சட்டவிரோதமாக பெருந்தொகையான இளம் பெண்களுக்கு கருத்தடைச் சிகிச்சை அளித்திருக்கின்றனர் என பொலிஸ் தலைமைப் பீடத்திற்குக் கிடைத்த புகாரை அடுத்தே மேற்கண்ட நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

கொழும்பு டி. சொய்சா பிரசவமனை, மற்றும் தலைநகரிலுள்ள அநேக தனியார் வைத்தியசாலைகளில் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்போது இங்கு பெருந்தொகையான சட்டவிரோத கருச்சிதைவுகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளது.

நான்கு பாடசாலை மாணவிகளும், ஒரு பட்டதாரி மாணவியும், மேலும் இளம் பெண்களும் சட்டவிரோதமாக கருச்சிதைவை மேற்கொண்டுள்ளதாகவும் வைத்தியசாலை ஊழியர் ஒருவர் இச்சிகிச்சைகளை மேற்கொள்ள உதவியதற்கு கட்டணங்கள் அறவிட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. [இ]

## கோட்டுவிற்ப வு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

நாகநாதர் தியாகராசா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி
வழக்காளி

மூல. ஈடு / 15108

எதிராக

திருமதி மனோன்மணி சிவரத்தினம், பொக்கணை ஒழுங்கை, ஊரெழு மேற்கு, சுன்னாகம்
எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/15108-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னர் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1979ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3-ந் திகதி (03-09-79) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 4437/50-ம் 26-5-76 தொடக்கம் 7-10-1977 வரைக்கும் ரூபா 3,000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 547-75 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை "கொடிஅரசன் கொக்கன்" நில. பர (20) இருபது எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு ஒழுங்கை மேற்கு நாகநாத இலயதம்பினைதனம் தெற்கு பெருமாள்பிள்ளை பெண் சிவபாக்கியத்திற்கும் கணபதிப்பிள்ளை பெண் நேசம்மாவுக்கு உரிய ஆதனங்கள் இதனூடாகப்போகும் ரோட்டு நிலம் புறநீக்கலாக இதடங்கலிற் சொரியலாய் 1/2 அரைவாசி அதற்குரியவைகளும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
மதிப்பாளரும்

தாசேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
01-06-1977 3308

## சீ-நோர் சவர்க்காரம் தயாரிக்கும்

[சித்தன்கேணி]

சீ-நோர் அபிவிருத்தி நிறுவனத்தினர் துணிகளுக்குப் பாவிக்கும் சவர்க்காரத்தை உற்பத்தி செய்யவுள்ளனர்.

பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்து பார்க்கப்பட்டபோது இது வெற்றி அளித்ததாகவும் மிக விரைவில் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [அ]

## பவுணுக்கு 560 ரூபா!

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச மக்கள் வங்கிக் கிளைகளும் கடந்த திங்கட்கிழமை முதல் அடைவு பிடிக்கப்படும் நகைகளுக்கு பவுண் ஒன்றுக்கு 560 ரூபாவை வழங்கத் தொடங்கியுள்ளன.

பவுண் விலை ஏறியதை அடுத்து மக்கள் வங்கி அடைவு பிடிக்கும் நகைகளுக்கு பவுண் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 280 ரூபாவை 560 ரூபாவாக உயர்த்துவதென முடிவுசெய்தது, முதலில் கொழும்பில் வழங்கப்பட்ட இவ்வதிகரிப்பு யாழ். பிரதேச வங்கிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (இ)

## தேடப்பட்டவர் கைது!

(புலோலி)

துன்னாலை தெற்கு வேம்படியைச் சேர்ந்த பிறவி ஊமையான டிரமன் தர்மர் என்பவர் கோடரியால் தாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக பொலிசாரினால் தேடப்பட்டு வந்த மேலுமொரு சந்தேகநபரை கிளிநொச்சிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கயிலன் அருந்தவம் என்ற சந்தேக நபரே கிளிநொச்சிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட வாலிபராவார். இச்சந்தேக நபரை பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ)

## மாவட்ட அமைச்சருக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ். மாவட்ட அமைச்சர் திரு உ. க. பண்டார விஜயக்கோன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள பலம் பொருள் அபிவிருத்திச்சபையின் விற்பனை நிலையத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவருடன் அவரது செயலாளரும் டாக்டர் ஒருவரும் வந்திருந்தனர்.

விற்பனை நிலையத்திற்கு அமைச்சர் வந்ததும் அங்கிருந்த ஊழியர் ஒருவர் அமைச்சரை இடைமறித்து பார்வையாளர்கள் செல்லவேண்டிய பாதையால் செல்லும்படி கூறினார்.

அமைச்சரும் ஊழியர் கூறிய பாதையில் சென்று அங்குள்ள பொருட்களைப் பார்வையிட்டார்.

உடனே அருகில் நின்ற எமது நிருபர் அந்த ஊழியரிடமும் விற்பனை நிலைய பொறுப்பதிகாரியிடமும், வந்தவர் மாவட்ட அமைச்சர் என்ற உண்மையை எடுத்துக்கூறியதும், அவர்கள் பதறியடித்துக்கொண்டு அமைச்சரை வரவேற்று உபசரித்தனர்.

அமைச்சரோ சிறு புன்முறுவலுடன் அந்த வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.

அடுத்து அமைச்சர் அங்கிருந்து புறப்பட்டு வீதியில் தமக்குத் தெரிந்த ஒருவருடன் கதைத்துக்கொண்டு நின்றார்.

அங்கே வந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் அவரைப் பார்த்து,

"இந்த இடத்தில் நின்று கதைக்கவேண்டாம் போங்க... போங்க..." என்றார்.

ஏவலாளிகளோ காவலாளிகளோ இன்றி சாதாரண பிரஜையைப்போல் உலாவிய அமைச்சரை அந்த ஊழியருக்கோ பொலிஸ்காரருக்கோ தெரிந்திருக்க முடியாததுதானே.

அமைச்சர் சாதாரண மனிதன் போன்று அன்று காலையில் நல்லூர் கோயிலுக்குச் சென்று வணங்கினார். காலையில் பல விற்பனை நிலையங்களுக்கும் சென்று பார்வையிட்டதுடன் பலரைச் சந்தித்து அவர்களது குறைகளையும் கேட்டறிந்தார்.

-'கண்டோஸ்'

## வன்னியசிங்கம் நினைவாக மணிமண்டபம்

[நெல்லியடி]

கோப்பாய் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வன்னியசிங்கத்தின் நினைவாக மணிமண்டபமொன்று அமைக்கப்படவுள்ளது.

இம் மணி மண்டபம் கல்வியங்காடு சந்தைக்கருகாமையிலுள்ள யாழ் மாநகரசபைக்குச் சொந்தமான காணியொன்றில் அமைக்கப்படும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஞாபகார்த்த மண்டபவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிதிவசதியின்மையால் இடையில் கைவிடப்பட்டிருந்தது. நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா செலவில் அமைப்பு வேலைகள் இப்பொழுது ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்று கூடி குழுக்கள் அமைப்பர்

[யாழ்ப்பாணம்]

இலங்கை கல்வி கலைபண்பாட்டுக் காப்புக் கழகத்தின் செயற்குழுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் கழகத்தின் செயலகக் கட்டிடக் கால்கோள்விழா நிகழ்ச்சிகள் பற்றிய தீர்மானமெடுக்கப்படும். கால்கோள்விழா இம்மாதம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இன்றைய கூட்டத்தில் விழா நிகழ்ச்சிகளைக் கவனிப்பதற்குக் குழுக்கள் அமைக்கப்படும்.

யாழ் வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக அமையவிருக்கும் செயலகக் கட்டிட கால்கோல்விழா ஏற்பாடுகள் தலைவர்கள் பல முனைத் தாராளமாகப் பணம் உபகரித்து வருவதாகவும், விழா ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும், இடபாரிய இயக்கத்திற்குத் தமிழ்ப்பெருமக்கள் பெருமனதுடன் நிதிவழங்கி உதவவேண்டுமென்றும் ஒவியரும் கழகப் பொதுச்செயலாளருமான திரு. எஸ். டெனடிக்ற் கேட்டுக்கொண்டுள்ளார். [அ]

## இலவசம்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அருளிச்செய்த "சிவாலய தரிசன விதி" என்ற நூல், சபைகள், இந்துமாமன்றங்கள் கோவில்கள் ஆகியவற்றிற்கு இலவசமாக கொடுத்துதவ யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் முன்வந்துள்ளனர் மேற்படி சபைகள் விண்ணப்பம்செய்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கைக்கு இறக்குமதியாகும் பொருட்கள் இந்தியா கடத்தல்
### இந்திய சுங்கக் கலெக்டர் தகவல்

சென்னை, ஆக 15

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் கைக்கடிகாரங்கள், நைலோன் மீன்பிடி வலைகள், ஸ்குலேட்டர்கள், மோட்டார் உதிரிப் பாகங்கள் ஆகியன இந்தியாவுக்குக் கடத்தப்படுகின்றன என்று தமிழ்நாடு சுங்க கலெக்டர் திரு ஆர். ஜெயராம் மதுரையில் தெரிவித்தார்.

முன்பெல்லாம் லவங்கம் மட்டுமே இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்தப்பட்டது என்றும் ஜெயராம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது :- கடந்த மாதம் தங்கக் கடத்தலில் இரு இலங்கைப் பிரஜைகள் ஈடுபட்டனர்.

கடத்தல்காரர்கள் இலங்கையிலிருந்து செல்லும் இந்திய வம்சாவளியினரை தமது கடத்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

இக்கடத்தல்களைக் கட்டுப்படுத்த சட்டங்களை மேலும் பலப்படுத்த அரசு ஆலோசித்து வருகிறது. [இ]

# ஒரு தேசாபிமானி மறைந்துவிட்டார்!

## ஜனாதிபதி இரங்கல் செய்தி



(கொழும்பு)

''ஆத்ம நண்பர் ஒருவரை நான் இழந்துவிட்டேன். பாடசாலையில் படித்த காலத்திலிருந்து கலாநிதி பெரேரா, டட்லி சேனநாயக்கா, கலாநிதி கொல்வின் ஆகிய மூவரும் என்னுடன் நெருங்கிப் பழகிய ஆத்மநண்பர்கள்''

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி என். எம் பெரேராவின் மறைவு குறித்து ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''கலாநிதி பெரேராவுடன் அரசியல் சித்தாந்தத்தில் இல் கருத்துவேறுபாடுகள் எனக்கு இருந்த போதும் அவை எமது நட்புக்கு இடையூறாக இருக்கவில்லை இருவரும் நெருங்கிய நண்பர்களாகவே இருந்துவந்தோம்'' என்று தெரிவித்த ஜனாதிபதி தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது;-

''கலாநிதி பெரேரா நாட்டுமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு வழிகளில் பாடுபட்ட ஒரு தேசாபிமானி, நாட்டுக்குச்சேவை யாற்றிய தேசாபிமானி மறைந்துவிட்டார்''

### இடதுசாரித் தலைவர்

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமான கலாநிதி பெரேரா உள்நாட்டு இடதுசாரி அரசியல் தலைவர்களின் முன்னோடியானவர். 1905ம் ஆண்டு பாணந்துறையில் பிறந்த இவர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கல்வி கற்றார். 1926-ம் ஆண்டு மேற்படிப்புக்காக லண்டன் சென்று அங்கு பொருளாதாரத் துறையிலும் தத்துவத் துறையிலும் கலாநிதிப் பட்டம் பெற்றபின்னர் 1934ம் ஆண்டு தாயகம் திரும்பி கொழும்பு பல்கலைக்கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

1935ல் லங்கா சமசமாஜக் கட்சி மூலம் அரசியலில் பிரவேசித்த கலாநிதி பெரேரா, இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கு ருவான்வெல்லைத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு எதிர்க்கட்சித் தலைவரானார்.

அன்றிலிருந்து 1977ம் ஆண்டுவரை நடைபெற்ற சகல தேர்தல்களிலும் வெற்றிபெற்று தெரிவானார். 1955ல் கொழும்பு மேயராகவும் தெரிவுசெய்யப்பட்டார். 1967லும் 1970லும் கூட்டு அரசாங்கத்தில் நிதியமைச்சராகப் பதவி வகித்தார்.

பாடசாலையில் கல்விகற்ற காலத்திலேயே விளையாட்டுத்துறையில் சிறந்த வீரராகவிருந்த கலாநிதி பெரேரா, இலங்கைக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராகவும் இருந்து வந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 74

# ''கூட்டம் நடைபெற்றதா; இல்லையா என்பது சமூகமளித்தோருக்கு மட்டுமே தெரியும்''

## வெகுஜன இயக்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றதோ, அல்லது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோ என்பது கூட்டத்துக்கு வந்தவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கமுடியும். இக் கூட்டத்துக்கு சமூகம் கொடுக்காதவர்கள் அதைப் பற்றிக் கூறுவதற்கு எவ்வித அருகதையும் இடையாது'' என்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் உபதலைவர்களும், செயலாளரும் கூட்டாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் விளக்கம் தெரிவித்துள்ளனர். இந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

''தீண்டாமைஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் நடைபெறவில்லை என்றும் தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்றும் குறிப்பிட்டு எஸ். ரி எஸ். நாகரத்தினம், கே சுப்பையா, கே. டானியல் ஆகிய மூவரும் ''ஈழநாடு'' பத்திரிகையில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். ஆனால் பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றதோ அல்லது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோ என்பது கூட்டத்திற்கு வந்தவர்கட்குமட்டுமே தெரிந்திருக்கமுடியும். இக்கூட்டத்திற்கு சமூகம் கொடுக்காத மேற்படி மூவருக்கும் அதைப் பற்றிக் கூறுவதற்கு எவ்வித அருகதையும் இடையாது. இவர்கள் ஏற்கனவே பொதுச் சபையினதோ அல்லது செயற்குழுவினதோ அங்கீகாரம் இன்றி வெறும் அறிக்கைகளையும், பேச்சுக்களையும் வெளியிட்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினவர்கள். அதன் காரணமாக பொதுச்சபை இவர்களின் மீது கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தது. மேலும் வெகுஜன இயக்கம், என்றுமே அமைப்பாளர் என்ற ஒரு பதவியைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இம் மூன்று நபர்களில் ஒருவரான கே டானியல், தன்னைத்தானே அமைப்பாளராக்கிக் கொண்டிருப்பது வேடிக்கையாகவே உள்ளது.

''பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றதா? இல்லையா? அதன் முடிவுகள் சரியானவையா? தவறானவையா? அதன் எதிர்கால நடவடிக்கைகள் என்ன என்பதை முடிவு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுலாக்கப்படும்போது சகரும் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியும். எந்த இயக்கத்தினதும் போராட்டங்களினதும் அச்சாணியாகத் திகழ்பவர்கள் மக்களே அன்றி தலைவர்களுக்குத் தாங்களே பட்டயம் சூட்டிக்கொள்ளும் தனிநபர்கள் அல்ல என்ற சரித்திர நியதியை தாழ்த்தப்பட்ட மக்களும் நிலைநாட்டுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு''

மேற்படி கூட்டறிக்கையை உபதலைவர்கள் சி நவரத்தினம், த தருமலிங்கம், செயலாளர், இ செல்வநாயகம் ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

# வடக்குரயில்களில் ரூமேனிய பெட்டிகளை இணைக்கவும்

## அமைச்சருக்கு பண்டிதர் தந்தி

(யாழ்ப்பாணம்)

வடபகுதி புகையிரதங்களிலும் அண்மையில் ரூமேனியாவிலிருந்து பெறப்பட்ட புகைவண்டிப் பெட்டிகளை இணைக்க உடன் நடவடிக்கை எடுக்கவும் எனக்கோரும் அவசரத் தந்திபொன்றை போக்குவரத்து அமைச்சர் அல் ஹாஜ். எம் எச். முகமதுவுக்கு ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் அனுப்பிவைத்துள்ளார்.

பண்டிதர் இரத்தினம் தமது தந்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது!

ரூமேனியாவில் இருந்து அண்மையில் பெறப்பட்ட புகைவண்டிப் பெட்டிகள் மாத்தறை, மலைநாடு, மட்டக்களப்பு, புகைவண்டிகளில் இணைக்கப்பட்டுள்ளன. வடபகுதி புகையிரதங்களில் இணைக்கப்படவில்லை இது பற்றி பிரயாணிகள் சங்கம் உட்பட பொதுமக்கள் பலர் முறையிட்டுள்ளனர்.

வடபகுதி புறக்கணிப்புக்கு இதுவும் ஓர் உதாரணம் என மக்கள் கருதுகின்றனர். இது அரசியல்பழிவாங்கல் என்று சிலர் கூறுவதை நான் நம்பவில்லை, இதை உடனே கவனித்து ஆவனசெய்க. (கா-இ)

கஹுமி, ஆக. 15

கிரிமியாவின் அத்தர் போன்ற வாசனைத்திரவியம் கண்டு செய்வதற்கு 460 தொன் ரோஜா இலைகள் அறுவடை செய்யப்படுகின்றன.

இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் தைலவகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ)

# மக்கள் கருத்து

## வினாத்தாளும் கணக்கியலும்

இம்முறை க பொ த. சாதாரணதர பரீட்சையில் கணக்கியல் பாடத்தின் வினாத்தாளில் ஏற்படுத்தப்பட்ட சில மாற்றங்கள், அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அதாவது கணக்கியல் பாடம் கற்பிப்பவர்களையும் தாக்கத்திற்குப் படுத்தி இருந்தது

கணக்கியல் பாடத்தில் வழக்கமாகக் கேட்கப்படும் வினா அமைப்பு முறை என்றுமில்லாதவாறு திடீரென இம்முறை மாற்றப்பட்டிருந்தது வழக்கமாக இடம்பெறும் மொத்தம் 6 வினாக்களில் 1ம், 2ம் வினாக்கள் கட்டாயமாகவும், ஏனையவற்றுள் எவையேனும் மூன்றையும் செய்யவேண்டும். ஆனால் இம்முறை இந்த வழக்கம் மாறப்பட்டு 1ம், 2ம், 3ம் வினாக்கள் கட்டாயமாகவும் ஏனைய மூன்றினுள் இரண்டிற்கும் விடை அளிக்கும்வண்ணமும் மாற்றப்பட்டிருந்தது. இதை விட மொத்தம் 6 வினாக்களில் 5 வினாக்கள் கணக்குச் செய்கை வினாக்களாகவும், ஆறாவது வினா சிறு குறிப்பு வினாவாக குறிப்பு எழுதும் முறையில் அமைந்திருக்கும். ஆனால் இம்முறை முதல் நான்கு வினாக்கள் கணக்குச் செய்கை வினாக்களாகவும், ஐந்தாம் ஆறும் வினாக்கள் குறிப்பு எழுதும் வினாக்களாகவும் முறை மாற்றப்பட்டிருந்தது.

இதை விட வினாத்தாளில் புதிய முறைகளில் கணக்குகள் அமைந்திருப்பதும், கணக்குகளிலே வழக்கற்ற புதிய சொற்கள் புகுத்தப்பட்டுள்ள நிலைமையும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது; கணக்கியல்துறையில் பயிற்றப்படாதவர்களின் மொழி பெயர்ப்புக்களைப்போல, சரியான சொல் வடிவத்தை வினாத்தாளில் பயன்படுத்தாத நிலைமையினால் பரீட்சார்த்திகள் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான புதிய முறைகளைப் பாடங்களில் புகுத்தும்போது அதனை பரீட்சார்த்திகள், கற்பிப்பவர்கள் அறியும்வண்ணம் அரசாங்கம் அதுபற்றிய அறிவிப்புக்களை முன்மாதிரி வினாத்தாள்கள் மூலம் (Model paper) பத்திரிகைகள், பாடசாலைகள் மூலம் அறிமுகம் செய்வது எல்லோருக்கும் வசதியாக அமையும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் விடும் இத்தகைய தவறுகள் மாணவர்களின் எதிர்காலத்தையும், மன நிலையையும் மாற்றி அவர்களின் முன்னேற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது இவ்வாறான நிகழ்ச்சிகள் இனிமேலும் நடைபெறுதவண்ணமும், அப்படி மாற்றம் ஏற்படுத்தப்படும் நிலையில் அதுபற்றிய அறிவிப்புக்களைச் சம்பந்தப்பட்ட பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் கவனித்து செயற்படுத்தவேண்டும் எனவும் பரீட்சார்த்திகள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

சி. வ. சிவகுமாரன்
சுழிபுரம்

# மடத்துவளவில் 80 வீடுகள்

(சித்தன்கேணி)

காரைநகரிலுள்ள மடத்துவளவு கிராம மக்களுக்கு தேசிய வீடமைப்பு திட்ட நிறுவனத்தின் உதவியுடன் 80 வீடுகள் விரைவில் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

சீ-நோர் நிறுவன சமூகப் பணிப்பாளர் திரு ஸ்ரனிஸ்லாஸ், வட்டுக்கோட்டை எம். பி. திரு தா. திருநாவுக்கரசு ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியொன்றில் சுய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இவ் வீடுகளை தேசிய வீடமைப்பு நிறுவனம் கட்டவுள்ளது. (கு)

# குப்பிளான் சோதி விநாயகர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் சொக்க வளவு சோதி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 13ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இம்மாதம் 22ம் திகதி திருவிழா பூர்த்தி அடையும்.

தினமும் இரவு சைவ சமய சிந்தனைபற்றிச் சிறப்புரைகள் நடைபெற்று வருகின்றன இன்று வியாழக்கிழமை மாலை 'ஓங்கும் ஒரு மருப்பான்' என்னும் பொருள்பற்றி இலக்கியத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 'மேன்மை கொள் சைவ நீதி' என்னும் பொருள்பற்றி பண்டித வ நடராஜனும் உரை நிகழ்த்துவர் இறுதி இரு திருவிழாக்களிலும் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெறும். (கொ-அ)

# அவன் பெயர் சொல்வோம்!

நல்லூரான் திருவடி வேண்டி
எல்லீரும் வாரீர் வாரீர்!
செல்லப்பன் தொழுத கந்தன்
பொல்லாப்பு நீக்கிக் காப்பான்!

தவயோகர் தொழுத கந்தன்
சிவபோகம் தருவான் வாரீர்!
பவவினைகள் அறுந்(து) அருளும்
நவசோதி நல்லூர்க் கந்தன்!

பாவலர்கள் பாடும் கந்தன்
மேவியருள் பொழிவா னென்றும்!
நாவலரின் தேவன் கந்தன்
நாவாலவன் பெயரைச் சொல்வோம்!

--தில்லை. சிவா

# சஞ்சலம் ஏன்?

குஞ்சரக் கன்றின் நேரிளையோன்!
குஞ்சரி மணாளன் வள்ளி காந்தன்!!
நெஞ்சக் கோவிலில் நிறைகின்றான்!
சஞ்சலம் இன்னமும் ஏன்மனமே?

சரவணன் திருப்புகழ் சிந்திப்பாய்!
சண்முகன் பதமலர் வந்திப்பாய்!!
நல்லைக் கந்தன் உனைக்காப்பான்!
இல்லைக் கவலையென் றுணர்வாய்!!

--முருகு, திருக்கேதீஸ்வரம்

# பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்தால் பாரதம் மறுபரிசீலனை செய்யும்

## பிரதமர் சரண்சிங் கருத்து

புதுடில்லி, ஆக. 15

'லோகசபையின் நம்பிக்கையை 'ஜனதா-எஸ்— காங்கிரஸ்' கூட்டரசாங்கம் பெறத் தவறும் பட்சத்தில் பதவியிலிருந்து ராஜினாமாச்செய்வதற்கு ஒரு நிமிடம்கூடத்தயங்கமாட்டேன்.'

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. சரண்சிங் இன்று புதுடில்லி செங்கோட்டையிலிருந்து நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் கூறினார்.

இந்தியாவில் சமயசார்பற்ற சமுதாயம் ஒன்றை அமைக்க சிறுபான்மை வேற்றுமைகளை மறந்து சகலரும் அரசுடன்ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட திரு சரண்சிங் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம்கூட அமைதியாகவும் ஜனநாயக ரீதியிலுமே இடம்பெற்றது என்றும் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இடைக்காலத் தேர்தல் ஒன்றை எந்தக் கட்சியுமே விரும்பமாட்டாது. எனினும் தேர்தல் எம்மீது திணிக்கப்பட்டால் மக்களிடம் செல்லத் தயங்கமாட்டோம்.

அணுகுண்டு தயாரிக்கும் நோக்கம் இந்தியாவுக்குக்கிடையாது! அணுகுண்டு உற்பத்திப் போட்டியிலும் கலந்துகொள்ளும் நோக்கம் எமக்குக் கிடையாது.

### பாக். அணுகுண்டு தயாரிக்க முன்வந்தால்...

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்க முன்வந்தால் அணுகுண்டு தயாரிப்பதில்லை என்ற முடிவை இந்தியா மறுபரிசீலனை செய்யும் என்றும் திரு. சரண்சிங் கூறினார். (இ)



## பாராட்டுவிழா

(சங்கானை)

நாடக நடிகர் நடிப்பு இசைமணி வி என் செல்வராசாவின் நாடக கலைச் சேவையை பாராட்டும்விழா இம்மாதம் 19ம் திகதி சண்டிலிப்பாய் டாக்டர் சிவகுருநாதன் மைதானத்தில மாலை நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய ஆசிரியர் திரு த சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் திரு சு வித்தியானந்தன் செல்வராசாவிற்கு தங்கப்பதக்கத்தை அணிவித்து பாராட்டுரை வழங்குவார்

மற்றும் வலி தென் மேற்கு உ. அதிபர் திரு சே கோபாலரத்தினம், கலையரசு சொர்ணலிங்கம், சட்டத்தரணி கு வினோதன், சமாதான நீதவான் மு சுந்தரமூர்த்திஉட்படபலர் ஆசியுரை வழங்குவர், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## தரமற்ற ச... ஈழத்து எழு... நூல்...

(கொழும்பு)

'இலக்கிய மகளிர் ... வேட்கை' போன்ற இல... இந்திய இரு நாடு... வாழும் தமிழர்கள் பு... கொள்ளக்கூடிய ... நூல்களை ஈழத்து எழுத்... கள் வெளியிடல் வே... என்று உதவிச் சுங்கப்... பாளர் திரு. க நவ... எழுதிய 'இலக்கிய ம... தயவேட்கை' எனும் ... வெளியீட்டிற்குத் த... வகித்த பேராசிரியர் ஆ. ... சிவம் குறிப்பிட்டார்'

பம்பலப்பிட்டி சர... மண்டபத்தில் நடை... இவ்வெளியீட்டு விழா... நூலின் முதற் பிரதியை ... ஜெயம் இரத்தினமும், இ... டாவது பிரதியை திரு. ... திரசேகரனும் பெற்றுக்கொ... டனர்.

நூலாய்வு செய்த ... இலையூர் செல்வராஜன் ... கையில் 'நாவலர்கள ... அடைத்துவைத்த இலக்... களை நவசோதி பாமரருக்... விடுவித்துள்ளார். ம... எளிதில் விளங்காத முறை... வசனங்களை முறித்து ... கவிதை என்று ஆயிரக்... காணவர்கள் எழுதிவரு...

புளியங்கூடலில் நடை... விருக்கின்றது

விவசாயிகளை மந்தைவ... யில் ஈடுபடுத்தும்வகை... இப்போட்டியை புளியங்... மகாமாரி சனசமூகநி... தினர் நடாத்துகின்றனர். [கா...

## மாட்டுவண்டிப் போட்டி

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதி ரீதியிலான மாட்டுவண்டி சவாரிப் போட்டி ஒன்று இம்மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

யாழ். மாவட்ட நிலைஅறிய

## அ. லி. சேவைச்சங்க குழு யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

அவசரகால சட்டம் அமுலில் உள்ள யாழ் மாவட்டத்தின் நிலைமையை நெரில் அறிந்து கொள்வதற்காக அரசாங்க லிகிதர் சேவைசங்கக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது

இக்குழுவில் சங்க தலைவர் திரு. எஸ் பி சவணமாரா, மத்திய கமிட்டி உறுப்பினர் திரு. ரஞ்சித் சந்திரசேகரா இடம் பெற்றுள்ளனர்.

யாழ். கிளைத்தலைவர் திரு. வி பொன்னம்பலம், செயலாளர் திரு. வி. எஸ். கனகரத்தினம், இக் குழுவினருடன் பல்வேறு இடங்களுக்கும் சென்றனர். இக்குழுவினர் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர்.

இக்குழுவினர் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ பி விஜயகோன், கல்வி அதிபர் திரு. தி மாணிக்கவாசகர் கச்சேரி உதவியாளர் திரு. சபாரத்தினம் ஆகியோரையும் சந்தித்தனர். (எ)

பங்கீட்டு உணவு முத்திரை:

## விண்ணப்ப பத்திரங்களுக்கு பலத்த தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டு உணவு பெறுவதற்கான முத்திரைக்கு விண்ணப்பம் செய்யும் பத்திரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், யாழ்ப்பாணத்தில் பலர் திரும்பிச் சென்றனர்.

கூட்டுறவு சங்கக் கிளைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் முத்திரை விண்ணப்பபத்திரம், முடிந்து விட்டதாக தெரிவித்தனர்.

முத்திரைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்திகதி இம்மாதம் 20-ம் திகதியாகும்.

இதுதொடர்பாக உதவி உணவுகட்டுப்பாட்டதிகாரி காரியாலயத்தில் விசாரித்தபோது, ஆரம்பத்தில் வந்த பத்திரங்கள், முடிந்து விட்டதாகவும், இன்று வந்துள்ள பத்திரங்கள் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகவும், இனிமேல் தட்டுப்பாடு ஏற்படாதெனவும் தெரிவித்தனர். (எ)

'என்- எம்.' மறைவு:

## யாழ். திறனாய்வு கழகம் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

"தமிழருக்கு சார்பான கொள்கையை கடைப்பிடித்தினால் கொழும்பு மாநகரசபை. பொறளை வட்டாரத்தில் அமரர் என் எம். பெரேரா தனது உறுப்பினர் பதவியையே இழந்தார். இந்த தியாகத்தை நன்றிவுணர்வுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் மறக்கமுடியாது"

யாழ். திறனாய்வு கழகத் தலைவர் திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராசா அமரர் என். எம். பெரேரா மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

"சிங்களவருக்கும், தமிழருக்கும் சம உரிமை கொடுக்க வேண்டும் என்ற கொள்கைக்காக பல இன்னல்களை தாங்கிக்கொண்டு கடுமையாக போராடினார். இதனால் தேசிய தலைவர்களில் முக்கியஸ்தவரான இவர் கொழும்பு மாநகரசபை முதல்வராக இருந்திருந்தும், தமிழருக்கு சார்பான கொள்கையை கடைப்பிடித்ததனால் பொறளை வட்டாரத்தில் தமது மாநகரசபை உறுப்பினர் பதவியையே இழக்க நேர்ந்தது. இந்த தியாகத்தை நன்றிவுணர்வுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் ஒருநாளும் மறக்கமுடியாது" (எ)

## இன்றைய பலன்

ஆடி மாதம் 31-ம் திகதி (வியாழக்கிழமை) (16-8-1979)

மேடம்: நற்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும், மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிருக்கும். வேண்டாத தொடர்பால் தவறான போக்குக்கும் இடமுண்டு.

இடபம்: இடர்கள் பலதாகும். இதயத்தில் எரிமலை குமுறும் உதவி செய்யப்போய் உபத்திரத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

மிதுனம்: மனம் நிறைந்த வாழ்வு மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் உறவினர்கள் உதவிக்கு ஓடிவருவர் செல்வாக்கும் பெருகும்.

கடகம்: சிந்தனை ஆற்றல் சிறப்பாயும் எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள் மூத்த சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம் போட்டி.

சிங்கம்: சுகபோக தினம் சொகுசான வாழ்க்கையே விரும்புவீர்கள், ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும் படித்தவர்களின் தொடர்பினால், பயன் அடைவார்கள். எல்லாம் இன்பமயம்.

கன்னி: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும் இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. பிள்ளைகளின் ... வாக்கு வளரும்'

துலாம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேம்பு பார்க்கப்படும். தொழில் துறையில் முன்னேற்றத்தை தடுப்பதற்கு சதி நடைபெறலாம் அகால போசனத்தின்மூலம் வயிற்றுக் கோளாறு ஏற்படமுடியும்,

விருட்சம்: ஆனந்தமயமான வாழ்க்கை அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், கணவன் மனைவி உறவு முறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும் சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்.

தனு: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக் கூடிக்கடன் தொல்லைகள் அதிகரிக்கும் நண்பர் ஒருவர் காலை வாரிவிடுவதற்கு முனையக் கூடும் சிந்தனை ஒருவழிப்படுத்திச் செயலாற்றவும் சுமாரான தினம்.

மகரம்: கவர்ச்சிகரமான தினம் சில விடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுவீர்கள் உள்ளத்தில் இடம் பிடித்து விட்ட ஒருஜீவனின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அடக்கம் நன்று.

கும்பம்: பாக்கிய விருந்துடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும் தக்க சமயத்தில் உதவுவதற்கு நண்பர் முன்வருவார் சிறப்பான தினம்.

மீனம்: மேச்சத்தகுந்த நடவடிக்கையின் மூலம் உங்களைச் துச்சமாக மதித்தவர்களைக் கூட அடிபணிய வைப்பீர்கள் பொருள் வளத்தில் புது ப்பொலிவு காணப்படும், சிலருக்கு பிறந்தகத்தின் எண்ணம் தலைதூக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் இன்று 33-வது நாள் மண்டலாபிஷேகமும் காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4-30 மணிக்கு மூலவருக்கு ஷண்முகார்ச்சனையும் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் நடைபெற்று சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும். (செ)

## சீன குழந்தைகளுக்கு 'பிரேமா'வின் குட்டி யானை

பீகிங், ஆக 15


பிரதமர் திரு. ஆர். பிரேமதாச இலங்கைக் குழந்தைகளின் சார்பில் சீனக் குழந்தைகளுக்கு பீகிங்கில் வைத்து குட்டி யானை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். (இ)

## வைத்தியர் பொன்னம்பலம் பரமு பரிகாரியார்

தாவடிப் பதியில் ஒளிவிளக்காகத் திகழ்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களின் உடல் நோய்களையும் உள நோய்களையும் தீர்த்து, கடந்தபோன அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அரும் பெரும் தொண்டாற்றிய பெருந்தகை வைத்தியர் ஆ. பொன்னம்பலம் பரமு பரிகாரியார் என அனைத்து மக்களாலும் அன்புடன் அழைக்கப்படுபவர். அன்னார் கடந்த 13-8-79 திங்கள் காலை இறைவன் திருவடியை அடைந்தார். தாவடியும் அதன் சுற்று வட்டாரக் கிராமங்களும் இவர் மறைவால் ஆழ்த்துயரில் மூழ்கியுள்ளன,

தாவடி உயர் சைவ குடும்பத்தில் உதித்த திரு. பொன்னம்பலம் இளவயது முதலே சிறந்த ஆசார சீலராகவும் மிகுந்த ஒழுக்கம் பண்பாடு உடையவராகவும் ஆன்மீகத்தில் நிறைய ஈடுபாடு உடையவராகவும் சமூகத் தொண்டில் நாட்டமுள்ளவராகவும் திகழ்ந்தார். ஏழை மக்களிடம் மிகுந்த அக்கறையுடன் பணிபுரிந்தார். தீராத பல பிணிகளை எளிதில் தீர்க்கும் வல்லமை உடையவராய்த் திகழ்ந்தார். சமூகத்தில் பெருமதிப்பும் வைத்திய உலகில் முதிர்ந்த அனுபவமும் உடைய இவர் மறைவு பெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோம்.

கலைமணி
எஸ். வடிவேல்

# ...ற்ற சஞ்சிகைகளின் இறக்குமதியால் ...த்து எழுத்தாளர் பாதிக்கப்பட்டுள்ளனர்

## நூல்வெளியீட்டு விழாவில் கண்டனம்

(கொழும்பு)

...கிய மகளிர் இதய ...' போன்ற இலங்கை, ... இரு நாடுகளிலும் ... தமிழர்கள் புரிந்து ...க்கூடிய வகையில் ... ஈழத்து எழுத்தாளர் ...வெளியிடல் வேண்டும்' ...டுவிச் சுவடிகளைப் ... திரு. க நவசோதி ... 'இலக்கிய மகளிர் ...ட்கை' எனும் நூல் ...டிற்குத் தலைமை ... பேராசிரியர் ஆ. சதா... ...ப்பிட்டார்'

...ப்பிட்டி சரஸ்வதி ...த்தில் நடைபெற்ற ...யீட்டு விழாவில் ...தற் பிரதியை திரு. ...ரத்தினமும், இரண் ...பிரதியை திரு. ந. சந் ...னும் பெற்றுக்கொண் ...

...வு செய்த திரு. ... செல்வராஜன் பேசு... ...தாவலர்களால் ...வைத்த இலக்கியங் ...சோதி பாமரருக்காக ...ன்னார். மக்கள் ...விளங்காத முறையில் ...ன முறித்து புதுக் ...என்று ஆயிரக்கணக் ...ள் எழுதிவருகிறார்

...டலில் நடைபெற ...றது ...பிகளை மந்தைவளர்ப் ...சடுபடுத்தும் வகையில் ...டியை புளியங்கூடல் ... சனசமூகநிலையத் ...டாத்துகின்றனர்.

(கா-கு)

கள்" என்று குறிப்பிட்டார்.

கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் இ. பாலசுந்தரம் பேசுகையில் "ஈழத்து நாட்டுப் பாடல்களுக்கும் இடமளித்து உயர்வளித்திருக்கிறது இலக்கிய மகளிர் இதய வேட்கை என்ற நூல்" எனக் குறிப்பிட்டார்.

கோப்பாய் அரசினர் கல்லூரி அதிபர் திரு. இளையசிவநேசன் பேசுகையில்: தமிழ் மக்களிடம் சொத்தும் பொருளும் இருந்தாலும் சிறந்த நூல்களை வாங்கி எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பண்பு தான் காணப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

பெரியார் பகுத்தறிவுக்கழகச் செயலாளர் திரு. எஸ். பி. பாண்டியன் பேசுகையில் "சமயங்களுக்கு அப்பாற்பட்டு இலக்கியங்கள் மிளிரவேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

நூலாசிரியர் திரு. க. நவசோதி தனது நன்றியுரையில், "கட்டுப்பாடற்ற இறக்குமதியால் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களும் அரசும் எழுத்தாளர்களைச் செயல்வடிவில் ஆதரித்து உதவ வேண்டும். தரமற்ற சஞ்சிகைகளின் இறக்குமதியால் தரமான சஞ்சிகைகள் ஈழத்தில் வெளியிடக்கூடிய சூழ்நிலை பாதிப்படைகிறது" என்று குறிப்பிட்டார்.

கன்னாதிட்டி பொதுப்பணி மன்றத் தலைவர் திரு. மா. குலமணி வரவேற்புரை கூறினார்.

---

# செப்டெம்பரில் 'எயர்லங்கா'வின் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

செப்டெம்பர் மாதம் முதல் "எயர்லங்கா" தனது விமான சேவையினை ஆரம்பிக்கவுள்ளது. நேற்றைய தினம் சிங்கப்பூரிலிருந்து இலங்கை வந்து சேர்ந்த "எயர்லங்கா"வின் போயிங் 707 ரக விமானம் சிங்கப்பூரிலிருந்து வாடகைக்குப் பெறப்பட்டு தலைமையகப் படையில் வாங்கப்பட்டுள்ளதாகும்.

'எயர்லங்கா"வின் புதிய சேவைபற்றி அதன் தலைவர் திரு கொலின் மார்டின் பிரண் தாயிக்கையில், வாரத்துக்கு 30 தடவைகள் 12 நாடுகளுக்கு "எயர்லங்கா" தனது சேவையை மேற்கொள்ளுமென்றும் பிரிட்டன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் இந்தியா மே. ஜேர்மனி, தாய்லாந்து, மலேஷியா, போன்ற நாடுகளுக்கூடாகவும் சேவையாற்றுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் பிரபல்யமான விமானசேவைகளுக்கு சளைக்காத வகையில் தரமான உணவு வகை, மதுபான வகைகளையும் "எயர்லங்கா"வில் பரிமாறப்படுமெனவும் தெரிவித்தார்.

---

# அ. எ. சங்க யாழ். கிளைச் செயலாளர் உபதலைவரானார்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கும் 18வது ஆண்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ் கிளையின் உத்தியோகத்தர் வேட்புமனுத் தாக்கல் நேற்றுமுன்தினம் முடிவுற்றது.

செயலாளர் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்குப் போட்டியில்லாததினால் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர் தற்போதைய செயலாளர் திரு செ மெற்றூஸ்மெயில், முன்னாள் மன்னார் கிளைச் செயலாளர் திரு. வே செல்வநாயகத்தை சங்கத்தின் செயலாளராகப் போட்டியிட வழிமொழிந்து, சங்கத்தின் உபதலைவரானார்.

திரு வே செல்வநாயகத்துடன் திரு ச ஸ்ரீபதி போட்டியிடுகின்றார். எனினும் சமரச முயற்சிக்கு தற்போதைய நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: த நமசிவாயம்; உபதலைவர்கள்: செ மெற்றூஸ் மெயில். ஆ பரஞ்சோதி; பொருளாளர்: ச கோபாலசிங்கம், துணைச்செயலாளர்: நா இராசேந்திரம் பத்து செயற்குழு உறுப்பினருக்கும் போட்டியில்லாததினால் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

வெளிக்கள ஆய்வு நிலையம்:

# தென்னிலங்கையிலும் அமைக்க முயற்சி

(நெல்லியடி)

தொண்டமனாறு பகுதியில் அமைந்துள்ள வெளிக்கள ஆய்வுநிலையம் போன்றதொரு ஆய்வு நிலையம் தென்னிலங்கையிலும் மிக விரைவில் அமைக்கப்படவுள்ளது.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த, தென்னிலங்கையைச் சேர்ந்திருந்த கல்விச் சுற்றுலா குழுவினரே இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தொண்டமனாறு ஆய்வு நிலையத்தினை பார்வையிட்ட இக் குழுவினர், இரண்டு போதனாசிரியர்களின் உதவியையும் கோரியுள்ளனர்.

திரு பரியகார தலைமையிலான இக்குழுவில் தங்காலைக் கல்வி அதிகாரி வியூபெர்ணாந்தோ, இரத்தினபுரி கல்வி அதிகாரி ஆரியவன்ச ஆகியோரும் இடம்பெற்றிருந்தார்கள்.

---

# ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஜனவரியில் 2500 கலை, வர்த்தக பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட இருக்கிறது

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட இருக்கிறது.

(இ)

---

யாழ். செயலகத்தில்

# மக்கள் பிரச்னையைத் தீர்க்க புதிய ஒழுங்குமுறைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்க செயலகத்தில் பல்வேறு விடயங்களுக்காகவும் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியைச் சந்தித்து தமது பிரச்னைகளுக்குத் தீர்வு காணவரும் மக்களின் வசதிக்காக பின்வரும் புதிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

இவ்வொழுங்குகள் ஒவ்வொரு திங்களும், புதனும் அமுலிலிருக்கும் இதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களை வெவ்வேறு நிர்வாக அதிகாரிகளிடம் யாழ் அரசாங்க அதிபர் பொறுப்பளித்துள்ளார். அவ்வதிகாரிகளும் அவர்களுக்குரிய பொறுப்பு விபரங்களும் பின்வருமாறு அமையும்:


மேலதிக அரசாங்க அதிபர்: திரு என் பி ஜெகநாதன்-காணி, துவக்குகள், வெடிமருந்துகள் சம்பந்தமானவை.

உதவி அரசாங்க அதிபர்- திரு என் தர்மபால வி-மாகாண நிர்வாகம், நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

---


# 1979 செப்டெம்பர் 1 ஆந் தேதிமுதல் அரிசிக் கூப்பன் புத்தகங்களுக்குப் பதில் இலவச காசுப் புத்தகங்கள்



1. அரசாங்கமானது 1979-09-01 ஆம் திகதி முதல் இலவச காசுப் புத்தகத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி ஆரம்பித்து வைக்கத் தீர்மானித்துள்ளது.

2. மாதாந்தக் குடும்ப வருமானமாக மொத்தம் (முந்நூறு) 300/- உக்குக் குறைவாகப் பெறுவோரே இத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க அருகதையுடையோராவர்.

3. விண்ணப்பப் படிவங்களானவை உங்களது கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலிருந்து/ அதிகாரமளிக்கப்பெற்ற விநியோகஸ்தரிடமிருந்து 1979 ஒகஸ்ட் 13ம் திகதிக்கும், 1979 ஒகஸ்ட் 20ம் திகதிக்குமிடையிற் பெற்றுக் கொள்ளக்கூடியனவாக இருக்கும்.

4. இத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தற்குத் தாம் அருகதையுடையவர் எனக் கருதும் எல்லோரும் ஒரு படிவத்தைப் பெறல் வேண்டும் என்பதுடன், ஏற்றவாறு அதனை நிரப்பி அதனை அந்த கூட்டுறவுச் சங்கக் கடையில்/ அதிகாரமளிக்கப்பெற்ற விநியோகஸ்தர் வசம் 1979. ஒகஸ்ட் 13ம் திகதி தொடக்கம் 1979ம் ஒகஸ்ட் 20ம் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் மீள்-ஒப்படைத்தலும் வேண்டும்.

5. இவ்வாறு செய்யத் தாமதித்தால் அருகதையுடைய விண்ணப்பக்காரர்களுக்கு அதனால் பாரதூரமான சிரமங்கள் ஏற்பட நேரும்.

6. தகுந்த பரிசிலனையின் பின்னர், இக் காசுப் புத்தகங்களைப் பெற அருகதையுடையவர்கள் எனக் கருதப்பெறுவோருக்குக் காசுப் புத்தகங்கள் வழங்கப்பெறும். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இக் காசுப் புத்தகங்கள் வழங்கப்பெறும்.

7. இக் காசுப் புத்தகத் தொகுதி ஒவ்வொன்றும் வழங்கப்பெறும் அம் மாதத்திற்கு மாத்திரமே செல்லுபடியானதாகவிருக்கும். அதாவது அம் மாதம் முடியுமுன்பே இக் காசுப் புத்தகக் கூப்பன்கள் பயன்படுத்தப்பெறுதல் வேண்டும்.

8. இக் காசுப் புத்தகங்களுடன், (முந்நூறு) ரூ. 300/- உக்குக் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கும் பிறிதாக (மண்ணெண்ணெய்க் காசுப் புத்தக) கூப்பன்கள் விநியோகிக்கப்பெறும்.

9. இந்த மண்ணெண்ணெய்க் காசுப் புத்தகக் கூப்பன்கள் வேறு நிறத்தில் அச்சிடப்பெற்றிருக்கும், இக் கூப்பன்களின் உடைமையாளர், இவை எல்லாவற்றையும் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்தற்குப் பயன்படுத்தாது விடும் பட்சத்தில், எஞ்சியவற்றைக்கொண்டு இதன் கீழ் 11ம் பந்தியிலுள்ள எந்த உணவுப் பண்டங்களையாவது கொள்வனவு செய்தற்குப் பயன்படுத்தலாம். இவையும், கூப்பன்கள் வலுவுடையனவான மாதத்திநுள்ளேயே பெறப்படுதல் வேண்டும்.

10. எவ்வாறுயினும், மண்ணெண்ணெய் கூப்பன்களைப் பயன்படுத்தி உணவுப் பண்டங்களைப்பெற்றுக்கொள்ளலாமாயினும் உணவுக் கூப்பன்களைக் கொண்டு மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்ய இயலாது.

11. உணவுக் கூப்பன்களையோ, எவையேனும் எஞ்சிய மண்ணெண்ணெய்க் கூப்பன்களையோ பயன்படுத்திக் கொள்வனவு செய்யக்கூடிய உணவுப் பண்டங்கள் வருமாறு:

1. அரிசி 5. சீனி
2. நெல் 6. கருவாடு
3. மா 7. (கிடைக்கக்கூடியனவாக இருக்கும் வேளைகளில்) பருப்பு வகை
4. பாண் 8. லக்ஸ்பிறே, விட்டாமில்க், பெரக்கும், தகரத்தில் அடைக்கப்பெற்ற கட்டிப்பால்.

12. பாண் தவிர, இவ்வுணவுப் பண்டங்கள் எல்லாம் உங்களது கூட்டுறவுச் சங்கக் கடையிலிருந்து/ அதிகாரமளிக்கப்பெற்ற விநியோகஸ்தரிடமிருந்து பெறப்படக் கூடியனவாக இருக்கும்.

13. பாணைப் பொறுத்துவரையில், பேக்கரிகளும், ஹொட்டல்களும் உணவுக் கூப்பன்களைப் பெற்றுக் கொண்டு, அவற்றுக்குப் பாணை விற்பனை செய்யுமாறு அறிவுறுத்துரை வழங்கப்பெறும்.

14. மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை, மண்ணெண்ணெய் வண்டில்கள் உட்பட அதனை விற்பனை செய்யும் எந்தச் சில்லறைக் கடையிலிருந்தும் மண்ணெண்ணெய்க் கூப்பன்களைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

**உங்கள் விண்ணப்பப் படிவங்களை 1979 ஒகஸ்ட் 13 ஆந் தேதிக்கும் 20 ஆந் தேதிக்கும் இடையில் உங்கள் கூட்டுறவு டிப்போவிலோ அதிகாரம் பெற்ற வியாபாரியிடமோ கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். நிரப்பிய விண்ணப்பப் படிவங்களை அதே கூட்டுறவு டிப்போவிலோ அதிகாரம் பெற்ற வியாபாரியிடமோ 1979 ஒகஸ்ட் 13 ஆந் தேதிக்கும் 20 ஆந் தேதிக்கும் இடையில் கையளியுங்கள்.**

### தேசிய நெருக்கடிமிக்க காலத்தில்

# தீர்க்கதரிசனத்துடனும் துணிவுடனும் இந்திய மக்கள் செயல்பட வேண்டும்

## ஜனாதிபதி ரெட்டி சுதந்திரதினச் செய்தி

புதுடில்லி, ஆக 15

இந்தியாவில் இன்று தோன்றியுள்ள தேசிய நெருக்கடிமிக்க காலகட்டத்தில் மக்கள் தீர்க்கதரிசனத்துடனும் நல்லெண்ணத்துடனும் துணிவுடனும் செயல்படவேண்டும். இவ்வாறு செயல்படத்தவறின் சரித்திரம் நம்மை மன்னிக்காது. நமது முன்னோர்கள் செய்த தியாகங்களை வீணாகிவிடக்கூடாது என்பதை உறுதிப்படுத்த நாம் எழுச்சிகொண்டெழவேண்டும்.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி நேற்றிரவு இந்தியாவின் 32-வது சுதந்திரதினத்தை ஒட்டி நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

திரு ரெட்டி தமது உரையில் மேலும் கூறியதாவது;-

இந்தியாவின் இன்றைய நெருக்கடியின் பூதாகாரத் தன்மையை நன்கு உணர்ந்து நாடு சிதைந்து போகாவண்ணம் அதன் ஒருமைப்பாட்டினை வளர்க்கவும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய சக்திகளுக்கு இடமளிக்காதவகையிலும் இந்திய மக்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவேண்டும்.

### நினைவு கூர வேண்டும்

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் சுயநலமற்ற வாழ்க்கையை இந்த நேரத்திலாவது நாம் நினைவு கூரவேண்டும்.

நாட்டின் இன்றைய அரசியல் நெருக்கடிக்கு எந்தவொரு அரசியல் கட்சியையோ அரசியல் கோட்பாடுகளையோ நான் குறைகூற விரும்பவில்லை. எந்த நிலையிலும் நமது தேசபிதாக்கள் செய்த தியாகங்கள் பயனற்றதாகிவிடாமல் பாதுகாக்கவேண்டியது எமது கடமையாகும்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக உலகின் ஒரு பகுதியில் ஒரு பசுஞ்சோலைப் பசுந்தரையாக நாம் உலகுக்கு முன்மாதிரியாக வாழ்ந்திருக்கிறோம்.

சுதந்திரதினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் எதிர்காலம் பற்றிய அக்கறையுடன் நாட்டு மக்களுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வு அடைகிறேன். (இ)

### பாகிஸ்தான் சுதந்திரதினம்

இஸ்லாமாபாத், ஆக. 15

பாகிஸ்தான் தனது 32-வது சுதந்திரதினத்தைக் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டாடியது.

இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் உட்பட பல வெளிநாட்டுத்தலைவர்கள் பாகிஸ்தான் சுதந்திர தினத்தையொட்டி ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக்குக்கு வாழ்த்துச்செய்திகளை அனுப்பியுள்ளனர். (இ)

## அன்னை இல்லம் செல்ல தந்தை தடைவிதித்தார்
### முடிவு: ஒரு தற்கொலை

(புலோலி)

தாய்வீட்டிற்குப்போவதற்கு தந்தை தடைவிதித்தால் மனமுடைந்த மகள் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்டார். இப்பரிதாப சம்பவம் பருத்தித்துறைப் பொலிஸ்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

புலோலி மேற்கு கூவிலைச் சேர்ந்த பொன்னையா செல்வமணி (16 வயது) என்பவரே சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராகும். மரண விசாரணையின்போது இறந்தவரின் தந்தை பொன்னையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''இறந்தவர் எனது மகள். நான் சட்டப்படி கவிலில் இருக்கும் இலட்சுமி என்பவரைத் திருமணம் செய்தேன். எனினும் சோணந்தியில் குண்டுமணி என்னும் ஆசைநாயகி ஒருவரும் எனக்கு இருக்கிறார். இவருக்கே இறந்த எனது மகள் பிறந்தார். இறந்தவர் அடிக்கடி தாய்வீட்டிற்குப் போகப் போவதாகக் கூறுவார். எனக்கு இவரை அங்கு அனுப்ப விருப்பமில்லாததால் தடுத்து வந்தேன். சம்பவதினத்தன்றும் தாய்வீட்டிற்குப் போகப் போவதாகக் கூறினார். நான் பேசினேன். அப்போது இறந்தவர் அழுதார். பின்னர் எனது மனைவி இலட்சுமி இவருக்கு ஆறுதல்வார்த்தைகளைக் கூறினார். நான் தொழிலுக்குச் சென்றுவிட்டு வந்து வீட்டுக்குள் நுழைந்தேன். அங்கு எனது மகள் சுருக்கிட்டுத் தொங்குவதைக் கண்டேன்''

இறந்தவரின் தாய் குண்டுமணி, சிறியதாய் இலட்சுமி, சிறியதகப்பனார் சிவப்பிரகாசம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த ஏ எஸ் வீ மரியநாயகம் சாட்சியங்களை ஆஜர்செய்தார். மரண விசாரணையை மேற்கொண்ட வடமராட்சிப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எம் வி புவனேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

### இஸ்ரேலில் எகிப்திய தூதரகம்?

கெய்ரோ, ஆக. 15

இஸ்ரேலில் எகிப்திய தூதரகம் ஒன்று விரைவில் இயங்க ஆரம்பிக்கும் என்று எகிப்திய அதிர் ஜனாதிபதி அன்வர் சதாத் தெரிவித்துள்ளார். (இ)

### ஈரானிய ஆட்சியாளர்களின்

## மூடத்தனத்தால் புரட்சி அரசு 6 மாதத்தில் வீழ்ச்சி அடையும்
### டாக்டர் பக்தியார் கருத்து

பாரிஸ், ஆக, 15

அயத்தொல்லா கொமேனியின் ஈரானிய புரட்சிவாத அரசு இன்னும் ஆறுமாத காலத்தில் ஆட்சியாளர்களின் மூடத்தனத்தினால் வீழ்ச்சி அடைந்துவிடும்.

பாரிஸில் தற்போது தங்கியிருக்கும் ஈரானிய முன்னாள் பிரதமர் டாக்டர் பக்தியார் பத்திரிகை நிருபர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈரானுக்குத் திரும்பிவரத் தாம் தயாராய் இருப்பதாகவும் கூறிய டாக்டர் பக்தியார், ஈரானிய எதிர்ப்பு நடவடிக்கைகளினால் புரட்சி அரசை வீழ்த்திவிட முடியாது என்றும் கூறினார் (இ)

### தொடர்ந்து போராட்டம்
#### திருமதி பூட்டோ கருத்து

இஸ்லாமாபாத், ஆக. 15

''பாகிஸ்தான் மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடவேண்டும்'' என்று பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியும் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் பாரியாருமாகிய திருமதி ஜனாப நுஸ்ரத் பூட்டோ பாகிஸ்தான் சுதந்திரதினத்தை ஒட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

தமது கணவர் சதி நடவடிக்கை மூலம் கொல்லப்பட்டாலும் அவரது இலட்சியங்களும் புகழும் அழியாது என்றும் ஜனாபா. பூட்டோ தமது பேச்சில் கூறினார். (இ)

## 'பரிசு எழுத்தாள'ருக்கு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'பரிசு எழுத்தாளர்' கலாநிதி எஸ் ஜெகநாதனின் இலக்கியப் பணியைப் பாராட்டி யாழ் சயன்ஸ் சென்ரர் ஸ்தாபனத்தினர் நடாத்தும் பாராட்டுவிழா இம்மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்விய ஜீவன் சங்கமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு க தி ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பாராட்டுவிழாவில் யாழ் பல்கலைக்கழக வைத்தியபீடப் பேராசிரியர் டாக்டர் என் சிவஞானசுந்தரம் (நந்தி) பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி ஆ சண்முகதாஸ், யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எஸ் சிவநேசச்செல்வன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், திரைப்பட வானொலி நடிகர் திரு கே எஸ் பாலச்சந்திரன், பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராஜன், யாழ் மாநகரசபை ஆணையாளர் சே. சிவஞானம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்குவார்கள். இப்பாராட்டு விழாவில் திரு. ஜெகநாதன் எழுதிய 'வானத்து நிலவு', சிறுகதைத் தொகுதி, 'ஊதடா சங்கு' (கவிதைத் தொகுப்பு) 'உடைவுகள்' (குறுநாவல்), கலாகுமரிநாதன் எழுதிய ஜெகநாதனின் ஆக்கங்கள் பற்றிய ஆய்வு நூலான 'புதுவெள்ளம்' எம் எவ எம் மீஆத் எழுதிய ஈழத்து இலக்கியத் துறையில் 'அடைமழை' (ஜெகநாதனின் ஆக்கங்கள் பற்றிய ஆங்கிலத்தில் ஆய்வுக்கட்டுரை) ஆகிய நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

நூல்களின் முதல்பிரதிகளை நாரந்தனைக் கிராமசபை முன்னாள் தலைவர் திரு த சண்முக [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)

## 'சீனா பலமுள்ள நாடாக விளங்க வேண்டும்'
### பிரதமர் பிரேமா கருத்து

(பீகிங்).

''ஆசியாவில் அமைதி நிலவ சீனா பலமுள்ள ஒரு நாடாக இருக்கவேண்டும்'' என்று இலங்கைப் பிரதமர் திரு ஆர். பிரேமதாசா இங்கு நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இங்கு விஜயம் செய்துள்ள இலங்கைப்பிரதமரைக் கௌரவிக்கும்முகமாக சீனப்பிரதமர் நேற்று அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே பிரதமர் பிரேமதாசா மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அணிசேரா இயக்கத்துக்கு சீனா வழங்கிவரும் ஆதரவுகளுக்கும் பிரதமர் பிரேமதாசா பாராட்டு வழங்கியிருந்தார்.

### பின்லாந்துக்கு ரஷ்ய ஏவுகணைகள்

மாஸ்கோ, ஆக. 15

சோவியத் யூனியனிடமிருந்து பின்லாந்து ஏவுகணைகளையும் போர் விமானங்களையும் கொள்வனவு செய்யவுள்ளது.

பின்லாந்து கடந்த நவம்பர் மாதம் ஆயுதக்கொள்வனவுக்கு 7 கோடி டாலரை ஒதுக்கீடுசெய்திருந்தது.

போர் விமானங்களையும் ஏவுகணைகளையும் செலுத்துவதற்கு பயிற்சிபெறும்பொருட்டு பின்லாந்து விமானப்படை வீரர்கள் சோவியத் யூனியனுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

### ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை

# உருவாக்க மக்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்

## எம். ஜி. ஆர். சுதந்திரதினச் செய்தி

சென்னை, ஆக 15

மத்தியில் நிலையான அரசு இருந்தால்தான் மாநில அரசுகள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் ஊக்கத்துடன் நிறைவேற்றி மக்களுக்குப் பணிபுரிய முடியும்.

இவ்வாறு தமிழகமுதல்வர் திரு எம். ஜி இராமச்சந்திரன் விடுத்துள்ள சுதந்திதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வகுப்புபேதமற்ற - சாதிகள் அற்ற- ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்க தமிழக மக்கள் தம்மை அர்ப்பணித்து பாடுபடவேண்டும் என்றும் திரு இராமச்சந்திரன் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார் என்றும் அவர் தமது செய்தியில் கூறியுள்ளார்.

### குடிப்பழக்கம் ஒழிய...

குடிப்பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்ற காந்திமகானின் அறிவுரைக்கேற்ப மதுவிலக்கை அமுல்செய்ய மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் திரு இராமச்சந்திரன் தமதுசெய்தியில் வேண்டுகோள்விடுத்துள்ளார். (இ)

### மாணவிகளுக்கு தனி பஸ் சேவை

(நெல்லியடி)

பருத்தித்துறை இ போ. ச. டிப்போவினால் மாணவிகளுக்கென தனியான பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலையங்களுக்கு மாலை நேரத்தில் கல்வி கற்கச் செல்லும் மாணவிகளுக்கு வீடு திரும்பும்பொழுதே இவ்வசதியை பருத்தித்துறை இ போ. ச. டிப்போ ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. நெல்லியடியிலிருந்து பருத்தித்துறைக்கு இப்பஸ் சேவை நடைபெற்றுவருகின்றது.

ஈழத்தின்

# முதுபெரும் அரசியல் விற்பன்னர் டாக்டர் என்.எம்.

## யாழ். மேயர் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

"தமிழ்ப் பேசும் மக்களின் சுய கௌரவத்துக்குப் பங்கம் இல்லாது, இத்தீவில் ஏற்பட்டிருக்கக்கூடிய தமிழர்-சிங்களவர் பிரச்சினைக்கு ஒரு சமரச தீர்வுக்கு அழைத்திருக்கக்கூடிய ஒரு மாபெரும் இடதுசாரி தலைவரை நாம் பறிகொடுத்துவிட்டோம்."

அமரர் என். எம். பெரேரா மறைவு குறித்து யாழ். நகர முதல்வர் திரு இ. விசுவநாதன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"தமிழ்ப் பேசும் தேசிய இனத்தின் பிரச்சினைகளுக்கு அதன் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது ஒன்றே சரியான மார்க்ஸிய தீர்வாக அமைய முடியுமென்று அண்மைக்காலமாக வலியுறுத்திவந்த இத்தீவின் முதுபெரும் அரசியல் விற்பன்னரான கலாநிதி என். எம். பெரேரா அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

"சந்தர்ப்பவாத அரசியலால் எந்த ஒரு சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வைக் கண்டடைய முடியாது என்பதையும், இடைக்கால ஏற்பாடுகளால், தங்குமடங்களால் விஞ்ஞான சோஷலிசத்தை ஒருபோதும் எய்தமுடியாதென்பதையும் சொந்த அனுபவங்களால் ஆய்ந்தறிந்த உண்மையை உள்ளபடி உரைத்த பெருந் தலைவர் என். எம். பெரேரா.

"தோழர் என். எம். பெரேரா மறைந்துவிட்டாலும் அவரது வாழ்க்கை வரலாறு இத்தீவில் ஒரு விஞ்ஞான சோஷலிச சிந்தனைப் போக்கில் ஒரு மைல் கல்லாக அமையும் என்பதில் ஐயமில்லை.

"தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த முறையில் தோழர் என். எம். பெரேரா தமது வாழ்வின் இறுதிக் காலகட்டத்தில் உறுதியளித்த தேசிய இனங்களுக்கு உரிய சுயநிர்ணய உரிமைக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட, இத்தீவில் சமத்துவத்துக்காகவும், சமநீதிக்காகவும் பாடுபட உறுதி எடுத்துக்கொண்டிருப்பவர்கள் பாடுபட்டு உழைப்பதே அன்னாருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாக இருக்கும்.

"மொழிச் சமத்துவத்துக்காகவும், பின் தமது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் தமிழ்ப் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் படுவதற்காகவும் பாடுபட்ட ஒரு பெருந் தலைவனுக்கு தமிழ்ப் பேசும் இனம் சிரம் தாழ்த்தி அஞ்சலி செய்கின்றது. அன்னாரின் இயக்கத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்." [ஈ]

# பழம்பெருந்தேசியதலைவரை இழந்துவிட்டோம்!

## யாழ். கிளைச்செயலாளர் இரங்கற் செய்தி

[யாழ்ப்பாணம்]

"நாடு ஒரு பழம்பெரும் தேசியத் தலைவனை இழந்துவிட்டது" என்று டாக்டர் என். எம். பெரேராவின் மறைவு குறித்து, இலங்கை சமசமாஜக்கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு கணேசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவிப்பதாவது:

தொழிலாள வர்க்கமும் ஏனைய விவசாய பாமர மக்களும், தோழரையும் நண்பனையும் ஓர் இலட்சியவழிகாட்டியையும் இழந்துவிட்டது.

தோழர் என். எம். இக்காலகட்டத்தில் காலமானது இந் நாட்டில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் ஓர் ஈடேற்றமுடியாத மாபெரும் இழப்பாகும்.

"நாடு வெள்ளையருக்கு அடிமைப்பட்டு இருந்த பொழுது பூரண சுதந்திரத்திற்காகவும் பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்திற்காகவும் கடைசி மூச்சுவரை போராடிய மகாதியாக புருஷர் அவர். ஆங்கிலேயரால் சிறைவைக்கப்பட்ட பொழுது சிறையில் இருந்து தப்பி, இந்தியா சென்று தலைமறைவாக இருந்தபோதிலும் இந்திய சுதந்திரப்போராட்டத்தில் தீவிர பங்குகொண்டார்.

"இந்நாடு இறைமையும் தன்னாதிக்கமும்கொண்ட சுதந்திர குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தியது. தோழர் என் எம். நிதியமைச்சராக இருந்தகாலத்திலேதான் என்பதை நினைவு கூருவது சாலவும் பொருந்தும்.

தற்போதைய எமது பணி, தோழர் என் எம். அடிக்கடி கூறுவதுபோல் "கடின உழைப்பாலும் தியாகத்தாலும் ஒரு விஞ்ஞான சோஷலிச சமுதாயத்தை அமைப்பதே அன்னாருக்கு செலுத்தும் அஞ்சலியாகும்".

### பெற்றோலை குடித்தாராம்

[யாழ்ப்பாணம்]

அக்காவுக்கும் தங்கைக்குமிடையே ஏற்பட்ட சச்சரவின் எதிரொலியாக தங்கை பெற்றோல் அருந்தி அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சபாரெத்தினம் இராசகவி (17 வயது) அவரது அக்கா புஷ்பகவியுடன் அடிக்கடி சண்டைபிடிப்பதாகவும் சம்பவதினமும் இருவரும் வாக்குவாதம் செய்ததாகவும் அதையடுத்து தங்கை இராசகவி தோட்டத்தில் நீர் இறைக்கும் யந்திரத்திற்குப் பாவிக்கவென வேண்டிவைத்திருந்த பெற்றோலைக் குடித்தார் எனவும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. [கோ]

### பரிசு...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

லிங்கம், யாழ் ஜேசீஸ் சங்கத் தலைவர் திரு எஸ் கனகரத்தினம், யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு எஸ் தியாகராசா, பூஜே கோட்டர்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு கே சிவகுமாரன் யாழ் மாநகரசபைஉறுப்பினர் ஜனாப் எம் காஸிம் ஆகியோர் பெற்றுக்கொள்வார்கள். [கு]


REGAL (Jaffna)
Daily 10-30 a. m. 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
THE OMEN
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, & 9-45
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

வீனஸ் (யாழ். நகர்) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

Dail 5 Shows
SHANTHI JAFFNA Phone: 7642
— N-B: ALTERED SHOW TIMES —
Daily 10-30, 2-15, 4-45, 7-15, & 9-45
ஒடெஸ்ஸா பைல்
THE ODESSA FILE Scope-Color
எகிப்திய - இஸ்ரேல் யுத்தகளத்தில் இக்கதை ஆரம்பமாகிறது!
அமெரிக்க அதிபர் கென்னடி சுட்டுக்கொல்லப்பட்ட தருணமும் இதுவே!!
2ம் உலக யுத்தத்தின் பின்பு சிறையிலிருந்து தப்பி தலைமறைவான 'ரோச்மன்' - சர்வாதிகாரி ஹிட்லரின் ஆணவமே உருவான கொலையாளி. இவன் அமைத்த 'ஒடெஸ்ஸா' - பயங்கரவாத இயக்கம், யூதர் இனத்தையே நிர்மூலமாக்கத்திட்டம் வகுக்கின்றது.
இப்படநாயகன் - "ஜோன்வொயிட்" - ஜெர்மனிய இளம் பத்திரிகையாளன் பீற்றர் மில்லர்!
ஒடெஸ்ஸா இரகசிய பைலைப் பெறச்சாகசங்கள் புரியும் பீற்றர் மில்லர் வெற்றி காண்கிறானா?
ரோச்மனின் கதி என்ன...?

ராணி (யாழ். நகர்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

SRIDHAR-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a.m. 3-00, & 7-30 p.m.
The Greatest Family Entertainment of all Times.
Bring the Young ones - They will Like it.
CECIL B. DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
[புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்]
Color
Starring: Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஆர் ராதா - சௌகார்ஜானகி நடித்த
நல்ல இடத்து சம்பந்தம்

மாதர் குலத்தின் அன்பானவேண்டுகோளுக்கு இணங்கி மீண்டும் 17ந் திகதி முதல்
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
(கலர்)
பார்த்தவர்கள் பார்க்காதவர்களுக்கு ஐயப்பனின் வரலாற்றைக் கூறி அவர்களுக்கும் மணிகண்டன் அருள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் ஐயப்பன் அனுக்கிரகம் உண்டாகும்.
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
சாமிசரணம்! ஐயப்ப சரணம்!!

வெலிங்டன் ... 
வெல்லி
காங்கேசன்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - ஜெயலலிதா
சூரியகாந்தி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
இன்ஸ்பெக்டர் மனைவி

RIO (Jaffna-TownHall)
Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00, 9-30 P. M.
Ryan O' Neal
Bruce Dern in
DRIVER

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி நடித்த
எங்க பாப்பா
(புதிய பிரதி)

வின்சர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00,
சோபன்பாபு - விஜயலலிதா நடித்த
ரிவோல்வர் ரீட்டா

"தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களின்

# ஆரம்பதிரட்டுச்சம்பளத்தை 600 ரூபாவாக உயர்த்தவும்

## ஆசிரியர் சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களின் ஆரம்பத் திரட்டு சம்பளம் ரூபா அறுநூறாக உயர்த்தப்படுவதோடு இவ் வாசிரியர்கள் நியமனம்பெற்ற ஐந்து வருடகால எல்லையினுள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதி பெற அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், அல்லது 10 வருடத்திற்குள் ஆசிரிய பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு அவர்களின் சேவையை மையமாகக் கருதி பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படவேண்டும்"

சம்பள மீளாய்வுக்குழு முன்னிலையில் ஆசிரிய சங்கங்கள் இணைந்து அளித்த சாட்சியத்திலேயே இத்தகைய கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இச்சாட்சியத்தின் போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், ஜாதிக குருசங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரிய சங்கம், பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் ஆகிய சங்கங்களே இணைந்து சாட்சியமளித்தனர்.

இச்சங்கங்கள் விடுத்த ஏனைய கோரிக்கைகள் பின்வருமாறு:

பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் ஆரம்ப திரட்டுச் சம்பளம் 910 ரூபாவாக உயர்த்தப்படல் வேண்டும். 1-1-74 திகதியிலிருந்து சமசம்பளத் திட்டம் அமுல் நடாத்தப்படல் வேண்டும். இவ்வாறு அமுல் நடத்தும் பொழுது சேவை மூப்புடையவர்களுக்கு அவர்களின் சேவை மூப்பை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தப் படிஉயர்ச்சி வழங்கப்படவேண்டும்.

பட்டதாரி ஆசிரியர்கள் விவகாரம்: பட்டதாரி (சாதாரண) பட்டம் பெற்ற சகல ஆசிரியர்களுக்கும் ஆரம்ப திரட்டுச் சம்பளம் ரூபா 880 ஆக உயர்த்தப்படல் வேண்டும்.

பட்டதாரி [சிறப்பு] பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஆரம்ப திரட்டுச் சம்பளம் ரூபா 940-ஆக உயர்த்தப்படல் வேண்டும்.

பட்டதாரி ஆசிரியர்கள் அவர்களின் உச்சச் சம்பளத்தை நியமனம் பெற்று 10 வருட கால எல்லையினுள் பெறத்தக்கதாக சம்பளத் திட்டம் அமைக்கப்படவேண்டும்.

பண்டிதர்கள், விஞ்ஞான கணித, வர்த்தக, கைப்பணி நாட்டியம், சித்திரம், சங்கீதம் போன்ற பாடங்களின் டிப்புளோமாப் பட்டம் பெற்றவர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

தரம் 4 தரம் 5 அதிபர்கள் பற்றி இவ்வதிபர் தரங்களின் சம்பளத் திட்டம் மிகவும் குறைவாக இருப்பதாலும் இத் 4-ம் 5-ம் தர அதிபர் பதவிகளை முற்றாக ஒளித்து அவர்களின் தரத்தை 3-ம் தர அதிபர்களின் தரத்திற்கு உயர்த்தி 3-ம் தர அதிபர்களின் சம்பளம் வழங்கப்பட வேண்டும்;

### சேவை நீடிப்பு

விசேட பாடத்துறை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று சகல ஆசிரியர்களுக்கும் சேவை நீடிப்பு பெறும் வயது எல்லை 60 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

### இளைப்பாறல்

10 வருட சேவையை முடித்த எல்லா ஆசிரியர்களும் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப இளைப்பாற அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

சம்பள மீளாய்வுக்குழு முன் ஏனைய சங்கங்களுடன் இணைந்து இ. த. ஆ. ச. பிரதிநிதிகளாக தலைவர் திரு டி. என். கே. வணசிங்கா, சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் திரு பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஈ)

## கலாநிதி என்.எம். மறைவு: துக்கதினம் அனுஷ்டிக்க முடிவு

[யாழ்ப்பாணம்]

கலாநிதி என். எம். பெரேராவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கறுப்புப் பட்டி, கறுப்புக்கொடி அணிந்து துக்கதினம் அனுஷ்டிப்பதென்று இலங்கைதெங்கு பனம்பொருள் ஊழியர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

கலாநிதி பெரேராவின் மறைவு குறித்து சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

"கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நிதியமைச்சராகக் கடமையாற்றியபொழுது வடபகுதியின் சிறந்த மூலவளத்தினையும் அதனைச் சுற்றி வாழும் பல ஆயிரம் ஏழைக் குடும்பங்களின் பொருளாதார வளத்தினையும் மேம்படுத்தும்பொருட்டு பல்வேறு அரசியல், சமூகத்தலைவர்கள், முதலாளிகள் எதிர்த்த போதும் துணிந்து கூட்டுறவுத் தவறணை முறையினை அமுல்நடத்திய பெருமை அவருக்கே உண்டு.

கூட்டுறவுமுறை அமுல் செய்யப்பட்டதால் இன்று 8000 மேற்பட்ட வறிய சீவல் தொழிலாளர்களின் குடும்பங்கள் ஓரளவுக்கு வளமாகவும் 1000க்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றும் சிறப்புற வாழ்கின்றனர்.

தமிழ் சமூகத்தில் தீண்டாமை என்ற கோஷத்துடன் ஒருபகுதி மக்களை தொழில் ரீதியாக ஒதுக்கிவைத்த நிலைமாறி இன்று ஐக்கியப்பட்ட ஏழைத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு தமது பொருளாதார வளத்தினைப் பெருக்குவதற்கும் சமூகத்தில் அவர்கள் ஐக்கியப்படவும் கூட்டுறவுமுறை வழிவகுத்தது. (கோ-கு)

## "தொழிலாள வர்க்கத்திற்கு பேரிழப்பாகும்"

[யாழ்ப்பாணம்]

"முதுபெரும் அரசியல் வாதியும் இடதுசாரிகளின் தலைவரும் பல போராட்டங்களில் பங்கெடுத்த போராளியும், தேசாபிமானியுமான கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு இந்த நாட்டின் தொழிலாள வர்க்கத்திற்கு, முழு நாட்டிற்கும் பேரிழப்பாகும்"

இவ்வாறு அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கற்செய்தியில் தெரிவித்துள்ளது. மகாசபை விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தமது நீண்டகால வாழ்வினை தொழிலாளர் நலனுக்காகவும் ஒரு சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் செலவழித்துவந்துள்ளார். இந்நாட்டில் வாழ்ந்துவரும் சகல இன மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் சோஷலிஸ அமைப்பின் மூலமே தீர்க்கப்படமுடியும் என்று நம்பிவாழ்ந்து தம்மை அதற்காக அர்ப்பணித்துவந்துள்ளார்.

"சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றம் கருதி கூட்டுறவுத் தவறணைமுறையைத் தாம் நிதி மந்திரியாக இருந்தபோது வடபகுதியில் அமுல்செய்தார். இவரின் நன்முயற்சியால் சீவல் தொழிலாளரும் பனைவாசிகளும் பலரும் பல நன்மைகளை அடைந்துவருகின்றனர்" (கோ-கு)

## யாருடையது

[யாழ்ப்பாணம்]

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் கண்டெடுக்கப்பட்ட தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவரின் ஜீ. சீ. ஈ. பெறுபேறு பத்திரத்துடன் கூடிய தஸ்தாவேஜுகள் அடங்கிய என்வலப் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (இ)

## புலோலி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மீது 1976ம் ஆண்டு வைகாசி மாதம் 8ந் தேதிக்கும் 10ந் தேதிக்கும் இடையில் கொடிகாமம் மற்றும் வேறு இடங்களிலும் வேறுபேருடன் சேர்ந்து குற்றம்புரியும் நோக்கத்துடன் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடியது, கொள்ளைக்கு சதிக்கும் திட்டமிட்டது. இவற்றின் விளைவாக புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வங்கியில் 8 லட்சத்து 57 ஆயிரத்து 453 ரூபாய் பெறுமதியான நகைகளையும் 7,355 ரூபாய் 44 சதம் ரொக்கத்தையும் கொள்ளையடித்தது ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

விசாரணைக்கானதேதி விரைவில் நிர்ணயிக்கப்படவிருக்கிறது.

## மக்கள்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பதில் அதிபட்சகர் [திட்டமிடல்] திரு எஸ் லோகேஸ்வரன்-வேலைவாய்ப்பு, தகவல்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்,

பொதுஜனத்தொடர்பு அதிகாரி திரு என் சண்முகசுந்தரம்- கலாச்சாரம், விளையாட்டுக்கள், சமய விவகாரங்கள்

உதவி அரசாங்க அதிபர் திரு என் பஞ்சலிங்கம்- நீர்ப்பாசனம், உணவு உற்பத்தி (கே. கு)

## அஞ்சலி செலுத்த கொழும்புசெல்வர்

[யாழ்ப்பாணம்]

கலாநிதி என். எம். பெரேராவின் மறைவிற்கு அஞ்சலி தெரிவிக்க விசேட பஸ்வண்டி மூலம் நூறுபேர் கொண்ட குழுவொன்று கொழும்பு செல்வதென்று தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமாலை சம்மேளனத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. இக் கூட்டத்தில் வடபகுதியிலுள்ள சகல சங்கங்களின் தலைவர், முகாமையாளர்கள் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக் கூட்டம் நடாத்துவதென்றும் அக்கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர், சமசமாஜக் கட்சித் தலைவர்களை அழைப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானித்ததுடன் இரங்கல் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. (கு)

## மக்களின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

"சாதாரணமனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பாடுபட்டு வந்த ஒரு பெரிய மனிதர் அவர்.

"அறிவில் சிறந்த மனிதரான அவர் தமது அரசியல் கொள்கையை நிலைநிறுத்துவதற்காக தமது முழுவாழ்க்கையையும் அர்ப்பணித்தார்.

இலங்கையின் சமீபகால சரித்திரத்தை சிறப்பாக அமைப்பதில் முக்கியபங்கை எடுத்துக்கொண்டார்". (ஈ)

## மஸாச்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பத்திரிகையாளருக்குத் தெரிவிக்கையில் கூறியதாவது;

"இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைகள் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப் படவேண்டியது. நாம் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினோம். இன்றைய அரசு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூலம் பிரச்னைகளை தீர்க்கலாம் என்று திரு அமிர்தலிங்கம் நம்பிக்கை கொண்டுள்ளார். நாங்களும் எதிர்பார்க்கிறோம்.

"மஸாச்சுசெட்ஸ் மாநிலத்துக்குத் தீர்மானம் நிறைவேற்ற உரிமையுண்டு ஆனால் அது மத்திய அரசின் கருத்தாக இருக்காது.

"எந்த இனத்தினதும் அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதையே அமெரிக்க அரசு வற்புறுத்துகிறது' என்று தெரிவித்தனர். (ம-கு)

## உளவு வேலையில் கடற்படை அதிகாரி

வாஷிங்டன், ஆக. 15

அமெரிக்காவின் அந்தரங்க தஸ்தாவேஜுகளை வெளிநாடுகளுக்கு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டார். (இ)

## அரசியல்...

(1ம்பக்கத்தொடர்ச்சி)

மிகச்சிறந்த தலைவர்களில் ஒருவர்

"ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியதால் சிறைவாசம் சென்று விடுதலையாகியபின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்தபோது அவருக்கு மாணவனாக இருக்கும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது.

"பெருந் திறமைவாய்ந்த தலைவராகவும், சமதர்மத் தந்தையாகவும் கலாநிதி பெரேரா விளங்கினார். தமது முழுவாழ்விலும் கீழ்மட்ட மக்களின் வாழ்வை உயர்த்துவதற்காக உழைத்ததோடு விவசாய, தொழிலாள மக்களின் அரசாங்கமொன்றை நிறுவப்பாடுபட்டார்

"இலங்கையின் சுதந்திரத்திற்காக பிரித்தானிய அரசிற்கு எதிராக கலாநிதி பெரேரா, சமசமாஜக்கட்சி ஆகியன நடாத்திய போராட்டங்களுடன் எந்தக்கட்சியும் ஈடுநிற்கமுடியாது"

தலைசிறந்த சோஷலிஸவாதியான சகல இனமக்களாலும் விரும்பப்பட்ட தலைவரை நாம் இழந்துவிட்டோம்"

திரு அ. அமிர்தலிங்கம் கலாநிதி பெரேரா உயிருடன் இருந்தபோது நேற்றுமுன்தினம் நண்பகல் 11 மணிக்கு பெரியாஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-கு)

## என். எம்.மின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கலந்துகொள்ளும் பொருட்டு அரசாங்க ஊழியர்களுக்கு அரைநாள் லீவு வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதேநேரத்தில்; மறைந்த தலைவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் பொருட்டு இலவசமாக வெள்ளைத்துணியை வழங்க சலுசலா நிறுவனம் முன்வந்துள்ளது.

### யூனியன் பிளேஸில்

மறைந்த தலைவரின் பூதவுடல் இன்று காலை ஒன்பது மணிக்கு பின்னர், கொழும்பு யூனியன்பிளேஸிலுள்ள லங்கா சமசமாஜகட்சியின் தலைமைக் காரியாலயத்தில் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

இறுதிச்சடங்குகள் திங்கட்கிழமை மாலை ஆறுமணிக்கு நடைபெறும்.


## மரண அறிவித்தல்

### இரத்தினசபாபதி பாலேந்திரா

காலஞ்சென்ற வீ எஸ். இரத்தினசபாபதி [பதி [ராணி, ஸ்ரீதர் சினிமா யாழ்ப்பாணம் உரிமையாளர்] அவர்களின் புத்திரன் பாலேந்திரா காலமாகிவிட்டார். இவர் நீலாவதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரியின் அன்பு மகனும், மகேந்திரராஜ் (U K) ராணி(U.K), பராசக்தி (U K, தேவராஜ் [U.K] ஸ்ரீதர் ஆகியோரின் சகோதரரும், மங்களம் (U.K), தயாளகுமார் [U K], ஜெகநாதன் (U K), சோதி [U K] ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

சக்திகுரே, பெரியவிளான், இளவாலை.

3314


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49 Telegram: Eelanadu. T.Phone 389.